## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 53/2025 |
| Prosecution Witness | : | அ.சா.2 |
| Name | : | சுரேஷ் |
| Father's / Husband Name | : | மணி |
| Address | : | ஆலம்பாடி ரோடு, சமத்துவபுரம், பெரம்பலூர். |
| Age | : | 32/2025 |

**தேதி : 04.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். நான் மெக்கானிக்கல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. மற்றொரு எதிரி டால்டா கண்ணன் என்பவரையும் தெரியாது. அ.சா1 ஐ எனக்கு தெரியும். அ.சா.1 எதற்காக காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்று தெரியாது. எனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸார் தன்னை விசாரித்தாகவும், போலீஸார் விசாரணையில் கடந்த 26.08.2024 அன்று இரவு 7.30 மணி அளவில் அ.சா.1 கோவிலுக்கு செல்லும்

வழியில் வந்துக்கொண்டிருந்ததாகவும் அப்போது தான் எதிரிகளிடம் பேசிக்கொண்டிருந்ததாகவும், அ.சா.1 நடந்து கொண்டு வருவதை பார்த்து

இருசக்கர வாகனத்திற்கு பின்னால் இருந்த 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி அச்சுறுத்தி மிரட்டி மேல்பாக்கெட்டில் வைத்திருந்த சாம்சங் ஏ2 செல்போன் மற்றும் பணம் ரூ.1000/- பறித்துக்கொண்டதாகவும், இரண்டாவது எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் தப்பிச்சென்றதாகவும், பின்னர் இது சம்மந்தமாக அ.சா.1 பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தாகவும் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் தன்னுடைய நண்பர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.